27 — 16-7

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணையபாப்ரம்மணே நம:

நளகூபர்களின் சாபவிமோசன மென்னும்

உரல்சரித்திரம்

இஃது

வளவனூர்:

M. பாகீரதி அம்மாளால்

எழுதப்பட்டது.

முதல் பதிப்பு 3000 காப்பிகள்

சென்னை சுந்தரம் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

...பி ரிஜிஸ்த்தர் செய்தது.

[2 அணா

O22:31
N33
126649

1933.

ஸ்ரீ

ஸ்ரீ கிருஷ்ணாயபரப்ரம்மணே நம:

நளகூபர்களின் சாபவிமோசன மென்னும்

உரல்சரித்திரம்

இஃது

வளவனூர்:

M. பாகீரதி அம்மாளால்

எழுதப்பட்டது.

முதல் பதிப்பு 3000 காப்பிகள்

சென்னை சுந்தரம் பிரஸில்,

பதிப்பிக்கப்பட்டது.

காப்பி ரிஜிஸ்த்தர் செய்தது.

விலை.] [2 அணா

1933.

விருத்தாம்பாள் துணை.

முகவுரை.

உரல் சரித்திரம் என்பது ஸ்ரீ கிருஷ்ண பாலலீலைகளில் ஈடுபட்ட ஒரு கதையாகும். பேரைமாத்திரம் கேட்டால் அநேகருக்கு கதை இன்னதென்றுகூட தெரியாது. நாரத முனிவரின் சாபத்தால் பூலோகத்தில் மருதமரமாக நின்ற குபேரனின் மக்களான நளகூபர்களின் சாப விமோசனத்தை குறிக்கும் கதையாகும். இது பண்டைக்காலத்து பாட்டானபோதிலும் தற்காலத்தில் அநேக குடும்பங்களில் பாடிவரும் ஒரு பழைய பாட்டாகும். இதை யார் உண்டாக்கியதென்றும் எப்பொழுது உண்டாக்கினதென்றும் சொல்லுவதற்குத் தகுந்த ஆதாரங்களில்லை. பண்டைக்காலத்து பகவத் சரித்திரத்தை இதுவரையில் யாரும் அச்சிட முன்வராதது நமது நாட்டிற்கே பெருங் குறையாகும். பண்டைக்காலத்து பெரியோர்களால் பாடப்பெற்ற இச்சரித்திரம் அடியோடு நசித்துப் போகாமலிருக்கும்பொருட்டு இக்காலத்து சிறுமிகளுக்கு எளிதில் அறியக்கூடுமாறுள்ள வர்ணமெட்டுகள் சேர்த்து நான் பெரியோர்கள் வாக்கால் கேட்டறிந்தவண்ணம் இதை அச்சடிக்க துணிந்தேன்.

பகவந்நாம ஸ்மரணம் பகவத் சரித்திர பாராயணம் செய்பவர்களுக்கு பகவான் முக்தியளிப்பதாக நூல்துணிபு. இச்சரித்திரத்தை நம்நாட்டுச் சிறுமிகள் பாடி பகவத் பிரசாதத்திற்கு பாத்திரமாக வேண்டுமென்று கருதி என் சிற்றறிவிற்கேற்றவாறு எழுதியுள்ளேன். இத்துடன் சேர்த்திட்டுள்ள சிறியதான வேதாந்த கச்சேரியும் ஷை சரித்திரம்போல் பெரியோர்கள் வாக்கால் கேட்டதை என் சிற்றறிவிற்கேற்றவாறு திருத்தியும் மாற்றியும் எழுதியுள்ளேன். கற்றறிந்த பெரியோர்கள் இதிலுள்ள குற்றத்தை களைந்து குணத்தைமாத்திரம் கைகொள்ளுமாறு பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்:

விருத்தாஜலம்
26-1-1933.

M. பாகீரதி அம்மாள்.

ஸ்ரீ

ஸ்ரீராமஜெயம்

உரல்சரித்திரம்

விருத்தம்.

கற்றசற்குரு தனைப்பணிந்தேன் உமையுடன்
வாணிபாதம் உண்மையாய்ப் பணிந்துகொண்டேன்
கமலாஸனன் ராணிபாதம் கரங்களால் தொழுதுகொண்டேன்
விமலரை உரலோடு சேர்த்த விந்தையை உரைசெய்குவேனே.

விருத்தம்.

தேன்பொழியும் பாகவதமும் தேசந்தன்னில்
கிருஷ்ணலீலை சுகர்சொல்ல
ராஜாவுந்தான் உரலோடுசென்று மருதமரமுறித்து
சாபத்தை தீர்த்ததொரு
சரித்திரமெல்லாம் ஏன்ஐயா எங்கட்குச்சொல்லவில்லை
என்று ராஜன்கேட்க
முனிமனமகிழ்ந்து வானவருடைய சாபம்தீர்க்கவேண்டி
மாதாவால் கட்டுண்டவகை சொல்லுவாரே.

பாட்டு. மருமகன் துரையே என்ற மெட்டு.

உற்றுக்கேள் உத்தரை குமாரா
உரைப்பேன் உண்மையை (உற்)
நித்தியானந்தஹரி பக்த பராதீனன்
உத்தமியசோதை பக்திக்கு கட்டுண்டதை (உற்)
தாதியர்களை வேலைக்கேவ தானே
ஒருநாள் யசோதை தயிர்கடைந்தாள் மேவி

பாலகன்செய்த காதலோடு லீலைகளைக்கூவி
கயிர்பிடித்தாதரவோடு கடைந்தாள் மேவி.

அந்தவேளையில்—புத்திரனை நினைக்க மெத்தபாலும் சுரக்க
முத்துமாலைசொலிக்க பற்றிகடைந்தாளப்போ (உற்)

வெள்ளைப் பீதாம்பரமுடுத்தி மெல்லிடையில் நல்ல
அரைநூல் மாலைசாற்றி
கைகளிலப்போதுள்ள வங்கிகங்கண மேற்றி
சொருக்கில் வைத்தமுல்லை மலருதிரச்சிந்தி
கடையும்போது—எல்லை அளந்தார் மெத்தகயினால் மறிக்க
பிள்ளையயணைத்துபால் பெருமையுடன் கொடுத்தாள் (உற்)

மெத்தபால் பொங்கிவரக்கண்டு பாலகன் தன்னை
விட்டுக் கீழிறக்க உள்ளேசென்றாள்
ஹரியுமப்போ மெத்தபசி கோபத்தினாலே
கோபத்துடனே மத்தால் தயிர்பானையை உடைத்து
வெண்ணையை வாரியுண்டார்—புத்திரன் செய்ததோர்
குற்றத்தை கண்டவள் பற்றிகழி எடுத்து
பாலனைத் துரத்தினாள் (உற்)

விருத்தம்.

அன்னையும் துரத்தும்போது ஆதரவோடு கிருஷ்ணன்
நின்ற இடம் நில்லாமல்தான் நிலைகுலைந்து ஓடலுற்றார்
வண்ணமாம் முகம்வியர்க்க மலர்முடி அவிழ்ந்துசோர
பிள்ளையை துடர்ந்துயசோதை பிடித்திட்டாள்
ஹரியை எதிர்த்திட்டாளே.

பாட்டு. ஆடினார் ஊஞ்சல் சர்வேசர் என்றமெட்டு.

பிடிப்பாயோ அன்னை நீ என்னை பிரும்மாதிகளுக்குக்கூட
முடியாது சொன்னேன் (பிடி)

அடுப்பில் பால்பொங்கிவர அவனியில் விட்டென்னை
முடுக்காக நடந்தாயே மோதிப்பானையுடைத்தேன் (பிடி)

அலைக்கழிக்காதே நீவாடா—திலகமிடவே தந்தை
தேடுறார்போடா (அ)

போனால் போகட்டுமது பொறுத்தேன் நான் மன்னித்தேன்
தேன்போல் மாங்கனிதருவேன் ஸ்ரீ கிருஷ்ணாவாடா (அ)

ஆசைகாட்டி என்தனே மோசம் செய்து பிடித்து
க்லேசப்படவே என்னே கிட்டி போட்டடிப்பாய் நீதான் (பிடி)
கட்டி தயிரன்னம் தொட்டுக்க வெண்ணே தருவேன்
மட்டி போட்டலே யுருய் மண்மேலே படியுது (அலே)
கட்டிதயிர் தரேனென்று எட்டிஎன்னே கட்டுவாய்
சட்டிவுடைத்தேனென்று தந்தையோடு சொல்வாய் (பிடி)
கடிக்க முறுக்குசீடை கைரொம்ப தருவேன்நான்
கொடுக்கவேண்டாம் அண்ணனுக்கு கூசாமல் வருவாய் (அலே)
எங்கெங்கு மலேகிறதை இடைச்சிகள் கண்டு
அங்கெங்கும் கும்பலாய் அவரை மறித்துக்கொண்டார்.

விருத்தம்.

மறித்திட இடைச்சியெல்லாம் மாதவர் மனமகிழ்ந்து
தரித்த அரைசலங்கைசுட்டி தண்டை யொடுசிலம்பு மின்ன
வருத்தத்தால் முகமும் வியர்க்க மாலேகள் வாடிநிற்க
கருத்ததிரு மேனியோடு கண்ணனும் ஒடலுற்ருர்.

பாட்டு.

அய்யன் செய்ததைக்கேளும் சற்று இப்போதரசனே
பவவினே தள்ள வையம் ஓரடியாக மகாபலி முன்னளந்தோர்
கையில் சிக்காமல் சென்ருர் களேத்து மாதாவும் நின்ருள் (அ)
நெஞ்சிலிரங்கி கண்ணன்வந்து யசோதே செய்த
தவத்தைக்கண்டுகந்து வஞ்சகமற்றயோகி
மனதுக்கெட்டாதவஸ்து
அஞ்சி அவளுக்கு அடங்கி எதிரில் நின்ருர் (அ)
தொட்டு இருகரத்தாலெடுத்து உரல்கிட்டகொண்டு
அவரை விடுத்தாள் எட்டிகயிரெடுத்துக் கட்டும்போது
யசோதை மட்டு போதாமல்
இருவிரலும் குறையக்கண்டாள் (அ)
பின்னெரு கயிறு சேர்த்துக்கட்ட
அது இன்னும் போதாமலேதட்ட
நல்ல கோபி மனேயில் நாடி கயறுமுட்ட
என்ன சேர்த்தாலுமிரு விரலும் குறையக்கண்டாள் (அ)

நொந்து யசோதை மனந்தவிக்க
அதை இந்திரன் பதிகண்டு களிக்க
மந்த ஹாஸத்துடனே மாதாவின் மீதிரங்கி
அந்தக் கயிற்றை தானே அதிகமாகக் காட்டினர் (அ)

எட்டிற்று கயிறு என்று மகிழ்ந்து
ஹரியைகட்டியே உரலோடு சேர்த்து
வரிந்து விட்டு மனைக்குள்ளே வேகமாகச் சென்ற பின்பு
மட்டிபோட்டுத் தவழ்ந்து மரத்திடையில் நுழைந்தார் (அ)

விருத்தம்.

உரலோடுகட்டியதோர் செய்தி எல்லாம்
ஊரிலுள்ள கோபியர்கேட்டு மீண்டு
திரளாக வெண்ணெயோடு தயிரும் கொண்டு
ஸ்ரீ கிருஷ்ணனை கேலிசெய்ய வென்று
மரத்தடியை நோக்கி நின்று மாதவருடைய
வடிவைகண்ணால் கண்டு
கரம்நீட்டு வெண்ணெ தயிர் தரேனென்று
கனித்திட்டாள் முன்நடந்ததை யெல்லாம் உரைத்திட்டாளே.

பாட்டு. ராதாகிருஷ்ணனை பஜியடா மனமே என்றமெட்டு.

கிருஷ்ணா உந்தன் துஷ்டத்தனத்தால்
கட்டுண்டாய் நீயும் (கிருஷ்)

அட்டஹாஸங்கள் செய்து அதட்டி எங்களை நீயும்
துரத்தி திரிந்தாயே கிருஷ்ணா (கிருஷ்)

பட்டத்தரசன் மகனென்று எங்களை தொட்டு பிடித்திழுத்தாய்
கண்டு நாங்களும் எட்டி பிடித்து
உந்தன் தாயோடு உரைக்கப் போனோம்
ஓடியேமடியிலிருந்தாய் அவளுமப்போது
எறக்கத்துடன் மகிழ்ந்து
தட்டி கழித்தெங்களை உரைத்தது பொய்யென்று
அதட்டியே அனப்பிவைத்தாள்
இப்போ— பெட்டிபாம்புபோல் அடக்கிக்கட்டினள்
கெட்டிகாரி யசோதை கிருஷ்ணா (கிருஷ்)

சின்னக்குழந்தை கையிலிருக்கிற
வெண்ணெயை பறித்துண்டாய்—அழுகும்போது
கன்றுவாலுக்கும் உன்னிதகைக்கும்
ஒன்றாகவே முடித்து—அதுஇழுக்க
பின்னால் விரட்டி முன்னால்போய் நின்று நகைத்தாயப்போது
உன் அன்னையோடு ரைத்தோம்
சின்ன பாலனென்றாளே—யசோதை
ஏனய்யா கட்டினாள் உன்னை (கிருஷ்)

விருத்தம்.

சொல்லியே வெண்ணை தந்து தோழிமார் கட்டிக்கொண்டாள்
தள்ளியே கரத்தாலப்போதான் அவர்மேல் எச்சில்துப்பி
வெள்ளமாம் கண்ணீர் சோரவிடுத்துமே அழுகும்போது
பிள்ளைகுரல் கேட்டுவந்தாள்
புல்லினார் யசோதையோடு சொல்லினாரே.

பாட்டு. வந்தாரே ஈச்வரப்பிரம்ம மெட்டு.

அன்னையே இவர்கள் என்னை எதிர்வந்து சின்னமாய்
வைதார் சொன்னேன் (அன்)

முன்னே எங்களை செய்த துடுக்கினால்
உன்னை உரலோடு கட்டினாள் என்றாள் (அன்)

கட்டுபட்டாய் என்று ஏசினாள்
என்கிட்ட ரகஸ்யம் பேசினாள்
தொட்டு வெண்ணெய் முகத்தில் பூசினாள்
நானும் எட்டிவந்தவர் தலையில் குட்டினேன் (அன்)

துஷ்டா நில்லென்று முதுகிலடித்தாள்
விட்டு ஓடப்படாமல் தவித்தேன்
மோசம்போய் நின்றேன் நீயும்கட்டினாய்
வேசிகள் வந்து கையை கொட்டினாள் (அன்)

பேசாம லிருக்கையிலே திட்டினாள்
என்வீட்டு வாசலில் வந்துகிட்டினாள்
நான் கடைசியில் தலைகுனிந்திருக்கும்போது
விசால நயனத்தால் பார்த்திடு என்றாள் (அன்)

விருத்தம்.

பிள்ளையும் சொல்லும்போது பெண்டுகள் தன்னைப் பார்த்து
உங்களல்லலும் பொறுக்காததால் கட்டினேனிவனை இப்போ
சல்லியம் செய்யவேண்டாம் தன்மனைசெல்லாவிட்டால்
இந்த எல்லையில் நீங்களெல்லாம் இருக்காமல் செய்வேனென்றாள்.

பாட்டு. மைந்தனே கேளாய் என்ற மெட்டு.

வருவானேன் நீங்கள் வாது என்ன போங்கள் (வரு)

அருமைபாலகனை அழுகவிட்டீர்கள்
ஆத்துவேலையை எண்டி கெடுத்தீர்கள் (வரு)

அறியாபோ நீயும் உன்மகன் சிறியனென்றாயே (அறி)

பாலகனென்றாய் பூதனைபாலுண்டு கொண்டான்
யசோதையே சின்னக்காலால் உன்மகன் க்லேசபடவே
சகடாசுரனை யுதைத்தான் (அறி)

சின்னவன் மீதில் வெகு அந்நியாயம் சொன்னீர்கள்
அவன் கையில் வெண்ணை தந்து—தானாகவே
கொள்ளை கொண்டா னென்றீர் (வரு)

உன்மகனென்று நாங்கள் உக்கலும் கொண்டோம்
என்சின்னபாலனை அடித்து தள்ளி
முன்னேவந்தென் ஸ்தன்னியமுண்டான் (அறி)

கேசவன்மீதில் வெகு தோஷத்தைச் சென்னீர்கள்
சாச்வத விசால நயனத்தை கண்டுமோசம் போனீர்கள் (வரு)

விருத்தம்.

யசோதையும் சொல்லிச் சென்றாள்
சூழ்ந்தகோபியரும் சென்றாள்
ஆதரவோடு ஹரியுமப்போ
நாரதர் சாபம்தீர மருதமரமுறிக்க
நளகூபர் எதிர் நின்று பாதத்தைப் பிடித்துக்கொண்டு
பணிந்திட்டார் ஹரியின் குணத்தை புகழ்ந்திட்டாரே.

பாட்டு. ஜயனே ஹரி ஹரி என்ற மெட்டு.

ஹரியே உந்தன் குணத்தைத் தெரிய உரைக்கவென்றால்
சிறியோம் எங்களால் ஆகுமோ (ஹரி)

கரியின் கலியை தீர்த்து கருணையோடு வந்து காத்தாய்
சிறியரான துருவரை தேவர்க்கு மேலாக வைத்தாய்
உந்தியில் நான் முகனைப் படைத்தாய்
சொந்த மனைவியை மார்பில் தரித்தாய்
தந்தை செய்திடும் வருத்தந் தீரவே வந்து
பிரஹலாதன் தன்னை காத்தாய் (ஹரி)

ஈசன் கயிலையில் எங்கள் மனவியோடு வாசமாய்
ஜலக்ரீடை மகிழ்ந்து செய்திருக்கும் போது
நேசத்துடன் நாரதர் நேரில்வந்து நிற்கவே
கூசியே வஸ்திரத்தை கொண்டுகுடுக்காமல் போனோம்
க்லேசத்துடன் முனிநொந்துபார்த்து
மோசம் போனீரென்றுரைத்து
தாஸ ரக்ஷக ஹரி வருகிறார் தேசத்திலே
மருதமரமாய் போங்களென்றார் (ஹரி)

விருத்தம்

நாரதமுனி உரைத்த சொல்லால் ஐயனே மரமாய் வந்தோம்
உங்கள் திருவடி தாங்க நாங்கள்
திரும்பஎங்கள் உருவைக்கொண்டோம்
மறுபடி பிறந்திடாமல் மலர்பாதம் சேரத்தானே
தரவேண்டும் வரம்தனை என்றுதானுமே துதித்துச்சென்றார்.

விருத்தம்.

உரலோடு சென்று கிருஷ்ணன் உயர்ந்த மரம்முறித்த
ஓசைபரவிட அண்டகோளம் பரந்துமே நடுங்கக்கண்டு
கரைந்துமே இடையர் நந்தர் கடுகியே ஓடிவந்து
அருகில் நின்றபாலகனையார் மாமுறித்ததென்றார்

விருத்தம்.

பாட்டு. தந்தைவிட்ட தூதர் வந்தார் என்ற மெட்டு.

நந்தர் வந்தங்கிடம் நின்றார்
மரத்தினடுவே மைந்தரைக் கண்டார்
பாலகனைக்கண்ணால் கண்டார்
மரம்பார் தன்னில் முறித்ததார் என்றார்
நந்தரிதைக் கேட்டார்
என்னவிந்தை யென்றுபயப்பட்டார்
அந்த இடையர்கள் பார்த்தார்
இவர் அறியாப்பிள்ளை யென்றுரைத்தார்
மரத்திலிருந்து இருபேர் கண்ணன் மலர்
தன்னில் பணிந்தார்பார் என்றார்
கண்கலங்கி கண்ணன் நின்றார்
நந்தர் கடுகியே மார்போடணைத்தார்
உரலைவிட்டு கயிரை அவிழ்த்தார்
நந்தர் உள்ளே கொண்டவரை விடுத்தார்
யசோதையின் மேல் கோபித்தார்
நீ செய்தது பிசகென்றுரைத்தார்
பாலகனுயிர் போனால்வருமோ
இந்த பாரிலபகீர்த்திபோமோ.
பசுவின் வாலால் நீரைசொரியாய்
பயந்தீர வேரக்ஷயை கட்டாய்
தான தருமங்கள் கொடுத்தார்—தாம்பயம் தீரவே அணைத்தார்
கேசவா விசால நயனா—வாசலில் போகாதே என்றார்.

விருத்தம்.

நந்தரும் சொல்ல யசோதை நற்பசுவின் வாலால் நீரை
அந்தமாய் சொரிந்துவந்து அப்போதே ரக்ஷைசெய்து
மைந்தனை மடிமேல் வைத்து மகிழ்ந்துமே அன்னமூட்டி
சுந்திரமனை விட்டு செல்லாதே எங்குமென்றாள்.

பாட்டு. கோலேன்னு கோலே என்ற மெட்டு.

உரலுடனே தவிழ்ந்தேன் நான் விரைவினிலிங்கு வந்தேன்
மரமிரண்டு முறிந்து எந்தன் மீதில் விழவும் வந்தேன்
பூர்வத்தில் புண்ணியமே நீபிழைத்தது
கார்முகில் வர்ண கணண
ஆலிலே துகில்வண்ண எந்தநுட பாலுண்ண வாகண்ணு
கோபியர் சொன்ன தென்ன
எனக்கிப்போ தாபத்து வந்ததென்ன
ஸ்ரீபதி சாக்ஷி என்ன எந்தன் மனஸ்தாபத்தை தீரும்மம்மா
அப்பனே தீர்த்தருளாய் எந்தன் ஒப்பில்லா மெய்ப்பொருளே
தத்துவ ஸ்ரீ ஹரியே உந்தன் பாதம் முக்கியமாய் நம்பினேன்.

மங்களம்.

மங்களம் சொல்லாய் மனதே மாதவர்க்கு
மங்களம் ஜெயமங்களம்
பன்னகசயனனுன புண்யா புருஷா
ஜெயமங்களம்
அன்னையால் கட்டுண்ட சின்னிகிருஷ்ணு
உனக்கு மங்களம் ஜெயமங்களம்
மண்ணை அளந்தஹரி கண்ணுஉனக்கு மங்களம் ஜெயமங்களம்
வெண்ணையுண்டிடைச்சியை சின்னஞ்செய்தோனே
உனக்கு மங்களம் ஜெயமங்களம்
கேசவாஹரே முகந்தா விசாலநயனு உனக்கு மங்களம்
ஜெயமங்களம்
பாசம் விலக்கும் ஹரிவாசுதேவா
உனக்கு மங்களம் ஜெயமங்களம்

வேதாந்தக் கச்சேரி

ஸ்ரீமத் அகிலாண்ட கோடி பிரமாண்ட பாண்ட தண்டோப தண்ட கரதண்ட மண்டிதகர—தாந்தோபதீப சுகுணமந்தர சச்சிதானந்த தாரக பிரம்ம மயம்—மூலாதார ஸ்வாதிஷ்ட்டான மணிபூரக விசுதாக்யேய சஷ்ட் சக்ர ஆதாரதேய நிரஞ்சய நிராமய நிர்விகல்ப மயம். சனகசந்தன சனத்குமார-சனத்புஜாத்-பிரக்லாத நாரத பராசர புண்டரீக வியாஸாம் பரீஷ சுக சௌனகாதி முதலிய பரமபாகவதர்கள் எச்சரிக்கை செய்ய பரமதமென்கிற வைகுண்டத்தில் ஸ்ரீபத்ர மணி சிம்மாசனத்தில்—ஸஹஸ்ராபரண பணீ சாயியாய் ஸ்ரீதேவி—பூதேவி—நீலாதேவி சமேதராய் எழுந்தருளியிருக்கிற ஸ்ரீமந் நாராயணருடைய திவ்விய ஸ்ரீபாதகமல சந்நிதானத்திற்கு அடியேன் ரிவனியூ போர்டுக்கு அதிகாரஸ்தனுகிய சதுர்முக பிரம்மா நித்தியம் திரிகாலங்களிலேயும், அநேக வினய விதேகங்களோடுகூடி சாஷ்டாங்க தண்டம் சமர்ப்பித்து எழுதிக் கொண்ட விண்ணப்பம்:—ஹாஜி என்னவென்முல் தங்களுடைய யனு யத்தனமான உத்திரவு படிக்கு சொர்க்கமத்திய பாதாளாதிகளென்கிற லோகங்களுக்கு கைலாஸத்தை ஜில்லாவாகவும், காலகண்டனை ஜட்ஜியாகவும், குருஎன்கிற பிரகஸ்பதியை கோர்ட்டு சிரஸ்த்ததாராகவும், அஷ்டவசுக்களை வக்கீல்களாகவும், புலஸ்திய பிரம்மாவை கோர்ட்டு சாஸ்திரியாகவும், தேவேந்திரனை கலெக்டராகவும், யமனை மாஜிஸ்ட்ரேட் விசாரணை கர்த்தராகவும், வருணனை இஞ்சினீயராகவும், வாயுதேவனை பைமாஷ் அமீனுவாகவும், குபேரனை கஜான்ஜியாயும், சுக்கிரனை ஹெட் அக்கவுண்டன்ட்டாகவு[ம்] சூரிய சந்திராதிகளை பைகிஸ்து காரர்களாகவும், குஜ சௌமி[ய] சனி ராகுகேதுக்களை டலாயத்து காரர்களாகவும், அக்னிதேவனை மஷால் ஜியாயும், பேதாளாதி பூதகணங்களை பில்லை சேவர்களா[க]வும், குமாரஸ்வாமி என்கிற சுப்பிரமணியரை தாலுக்கா முனிசிப்புதாராகவும், அதல விதல சுதல மகாதல ரஸாதல தராதல பாதாள பூலோக புவர்லோக சுவர்லோக மகாலோக ஜனலோக தபோலோக சத்யலோக மென்கிற லோகங்களை பதினுலு தாலுக்காக்களாகவும், வைவஸ்சுதம், ஸவம்புவம், ஸாவாகிஸிஷ்ட்டம் என்கிற பதினுலு தாசில்தாரர்களை நியமித்து த்வைதம் என்றும், வசிஷ்டாத்வைத மென்றும், அத்வைதமென்றும் சொல்லுமி[டம்]

களில், த்வைதம், வசிஷ்டாத்வைதங்களுக்கு ஒருசட்டமும், அத்வைதத்திற்கு ஒருசட்டமாக இரண்டுசட்டங்கள் ஏற்பாடுசெய்து அவரவர்களுடைய புண்ய பாவங்களேயும், கர்மங்களேயும், மரக்காலினுலே அளந்து கணக்கிட்டு தகுந்தபடி சிக்ஷித்து வரும்படிக்கு உத்திரவு செய்திருக்கிறீர்களாம். இப்படியிருக்கும்போது மகா மேருவுக்கு தக்ஷிணபாகத்திலுள்ள ஜம்பூத்தீப மென்கிற கிராமத்திலே சரயூநதிக்கு மேற்கே சமந்தகமணி என்கிற புன்செய் நிலத்திலே சப்த ஸ்பரிசுரூப ரஸகந்தங்கள் என்கிற ஏர்காலாலே உழுது ப்ரகிருதிகுணமென்கிற விரைவிதைத்து ரஜஸ்த மோகுணம் என்கிற பயிர் உண்டாக்கி காமக்ரோத, லோப, மோக மதமாச்சரியம் என்கிறகளே எடுத்து சாத்மீகம் என்கிற வெள்ளாண்மை விளேந்து பலன் சேதமாப் போகிறதாக அந்தக்கிராமத்து மிராசுதார்களான வசிஷ்டர், வால்மீகர், ஜவதக்னி, கண்வர், கௌதமர் ஆத்ரேய, கவுண்டண்ய, நாரத ஜபாலி ஸௌனக, பலி, கில்யாதி, விஸ்வாமித்திரர் முதலானவர்கள் அந்த தாலுக்கா, தாசீல்தாரரான வைவஸ்வத மனுஇடத்தில் பிராது செய்து கொண்டாராம். அந்த தாசீல்தார் மாசூல்களே அறுத்து சாலோக சாமீப சாரூப சாயூஜ்ய மென்கிற களத்திலே சேர்த்து மோக்ஷ மென்கிற முத்திரைப்பலகையினுலே முத்தரித்து வைத்தால் தான் பின்னுல் விசாரணே செய்வதாகச் சொன்னுராம். அதுபிரகாரம் மாசூல்களே அறுவடை செய்யும்போது வசிஷ்ட்டருக்கும் விசுவாமித்திரருக்கும் வாக்குவாத முணடாக வசிஷ்டர் கேட்டுக் கொண்டபடி தாசீல்தார் மாசூல்களே அறுக்க விடாமல் தடுத்து விட்டாராம். இந்த தாசீல்தார் விசாரணே செய்தால் தனக்கு நியாயம் கிடைக்காமாட்டாதென்று விஸ்வாமித்திரர் தேவலோக மென்ற ஹொசூர் கச்சேரியில் தேவேந்திர னென்கிற கலெக்டரே விசாரணே செய்ய வேணுமென்று மனுவில் கேட்டுக்கொண்டாராம். அப்படிக்கு அவர் விசாரணே செய்ய, வாதியான விசுவாமித்திருடைய மனுவில்கண்ட முதல் சாக்ஷி தூர் வாஸருக்கும் 2-வது சாக்ஷி நாரதருக்கும் சம்மன் அனுப்பி அவர்களேயும் உபயவாதிகளான வசிஷ்டர் விசுவாமித்திரர்களே வரவழித்து விசாரணே செய்ததில் த்வைத மென்கிற சட்டத்தில் மூன்ருவது பிரகரணத்தில் சொல்லியிருக்கிற

ஸ்லோகம்

1. அந்தர்ய கிச்சகிதம் சர்வம் வியாப்ய
 நாராயண ஸ்தித.

பிரகாரமும்

2. வாதீச ப்ரதிவரசய தாசம் சம்த தாஜயம் உபயோர்
லம்சமே ப்ருப்தம் ராஜீனுமா பலம் லபோது.

பிரகாரமும் அந்த கோர்ட்டு வாதியான விசுவாமித்திரருக்கும் பாத்தியதை இருக்கிறதென்று கலெக்டர் தீர்மானம் செய்தாராம். பின் வசிஷ்டர் ஜில்லாகோர்ட் ஜட்ஜிக்கு அப்பீல் செய்ய, அவரும் கீழ்கோர்ட்டு ரிகார்டுகளை வரவழித்து கோர்ட்டு பிருகஸ்பதியுடன் பரிசீலனை செய்து, வசிஷ்டர் கோரிக்கொண்ட சாக்ஷிகளாகிய ப்ருகு மகாரிஷியையும், ஆத்ரேய மகாரிஷியையும், வால்மீக மகா முனியையும், நாரத மகா முனியையும், கேஸ் விசாரணை காலத்து ஸ்மரித்தமாத்திரத்தில் ஹாஜரானவர்களிலே நாரதரை க்ராஸ் கொஸ்சன் (Cross Question) செய்து விசாரணை செய்ததில் அத்வைதம் என்கிற சட்டத்தில் 6-ம் பிரகரணத்தில் 18-வது அத்தியாயத்தில் சொல்லியிருக்கிற,

ஃஸ்லோகம்

சர்வதர்ம்ம பரிததியாஜ்யம் மாமேகம் சரணவிரஜஹ்வான்
சர்வபாபேப்யா மோக்ஷஸா யுஜ்ய ஹிராஜ்யஃ

பிரகாரம் இந்த ஜில்லா கோர்ட் அப்பீல் வாதியான வஸிஷ்டருக்கு பாத்யமிருப்பதாக ஜில்லா ஜட்ஜியாகிய காலகண்டன் ஜட்ஜ்மெண்ட் சொன்னாராம். மறுபடியும் விஸ்வாமித்திரர் தன்னுடைய சம்பாத்தியம் தான் அடையவேண்டுமென்று பஞ்சாக்கினி மத்தியில் தபசு செய்ய ஆரம்பித்தபடியால், இந்த மனுதாரிடத்தில் புத்ர வாத்ஸல்யத்தை வைத்து விஸ்வாமித்திருடைய கோரிக்கையை நிறைவேற்ற வேணுமென்று நளின வஜிதாத்வஜவஜ்ர அங்குசாதி பாதங்களுக்கு இதுவே அநேக தசகோடி சதகோடி கோடி கோடி சாஷ்டாங்க நமஸ்காரமென்று பிரம்மா எழுதிக்கொண்டதற்கு ஸ்ரீமந் நாராயணன் டெமி அபீஷியல் (Demi Official) லெட்டரில் வசிஷ்டர் வாயால் விசுவாமித்திரர் பிர்ம்மரிஷி ஆவாரென்று தெரிவித்த பரப் ப்ரும்ம ஜட்ஜ்மெண்ட்டுக்கு நமஸ்தே நமஸ்தே.

முற்றிற்று

—

NELSON & CO MADRAS